TNVR090001862016

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14–ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண். 3/2023
இன்
முதலேற்பு வழக்கு எண்.41/2016

1. பரணீஸ்வரன்
2. பொன்னுச்சாமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு அதன் பிரதிநிதியான
   மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மூலம்
2. உதவி ஆணையர்,
   இந்து சமய அறநிலையத்துறை, விருதுநகர்.
3. அருள்மிகு குமரன் திருக்கோவில்
   அதன் தக்கார் மூலம்
4. ராமமூர்த்தி
5. பாலகங்காதரன்
6. ஜம்புக்குமார்
7. மாரியப்பன்
8. உஷாராணி
9. பாண்டீஸ்வரி
10. காசிராஜன்
11. வேலம்மாள்
12. முருகன்
13. கணேசன்
14. விஜயகுமார்
15. ஜெயக்குமார்
16. ஜெபத்துரை மதீஷ்
17. ஆரோக்கியமேரி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

18. நாகராஜ்
19. ஆதவன் வடிவேல் ... சேர்க்கப்பட வேண்டிய 18, 19 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் 05.10.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், 3–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.V. நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 7 மற்றும் 11 முதல் 13 எதிர்மனுதாரர்கள் ஏற்கனவே ஒருதலைப்பட்சபடுத்தப்பட்டும், 1, 2, 5, 8, 9, 10, 14 முதல் 19 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதரப்பாக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரர்கள் தரப்பில் சேர்க்கப்பட வேண்டிய 18, 19 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 18, 19 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக்கோரி கட்டளை 1 விதி 10(2) பிரிவு 151 சி.பி.சி.–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம் :–</u>

(i). இந்த மனுவின் 1–ஆம் மனுதாரர் அசல் வழக்கில் 1–ஆம் வாதி ஆவார். 2–ஆம் வாதிக்கும் சேர்த்து இந்த அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கானது தபசில் ஏ ஷெடியூல் சொத்து 1–ஆம் வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதன் பின் துயர்ச்சியாக தபசில் சொத்தில் 1–ஆம் வாதியின் அமைதியான அனுபவத்தை 3–ஆம் பிரதிவாதியோ அவர் தம் ஆட்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும், தபசில் பி ஷெடியூல் சொத்து 2–ஆம் வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என

விளம்புகை செய்தும், அதன்பின் துயர்ச்சியாக தபசில் சொத்தில் 2–ஆம் வாதியின் அமைதியான அனுபவத்தை 3–ஆம் பிரதிவாதியோ, அவர் தம் ஆட்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கினை இந்த அபிடவிட்டின் ஒரு பகுதியாக வாசித்து கொள்ள வேண்டும்.

(ii). இந்நிலையில் மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்களும் வனையப்பட்டு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.

(iii). இந்நிலையில் 2, 3 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் சேர்க்கப்பட வேண்டிய 18, 19 பிரதிவாதிகள் ஆகிய இருவரும் தொடர்ந்து தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள பகுதியில் அத்துமீறி பிரவேசம் செய்தும், ஆக்கிரமிப்பு போர்டுகளை அமைத்தும் இடையூறு செய்து வருகிறார்கள். கடந்த 17.09.2023–ஆம் தேதியன்று 2–ஆம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் சில சமூக விரோத நபர்கள் முட்களை வெட்டி மறித்தும், எல்லை கற்களை அகற்றியும் தாவா சொத்தின் புற அமைப்புகளை மாற்றும் விதமாக டிராக்டர் கொண்டு உழுதும் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். வழக்கு தீர்ப்பு பிறப்பிப்பதற்கு முன்பாக தாவா வழக்கு சொத்துக்களை சேதப்படுத்தும் நோக்கத்துடனும், மதிப்பிழக்க செய்ய நோக்கத்துடனும் புற அமைப்புகளை மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இது சம்பந்தமாக ஏற்கனவே 05.06.2023–ஆம் தேதி காவல் அதிகாரியிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய முயன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், 2, 3 பிரதிவாதிகள் தொடர்ந்து சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

(iv). இந்நிலையில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாக தாவா சொத்தை குத்தகை ஏலத்திற்கு விட்டது போல் ஆவணங்களை ஜோடித்து சேர்க்கப்பட வேண்டிய எதிர்மனுதாரர்கள்/18, 19 பிரதிவாதிகள், மனுதாரர்கள்/வாதிகளின் உரிமைகளை பறிக்கும் விதமாக 1, 2 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் நடந்து வருகிறார்கள். சேர்க்கப்பட வேண்டிய எதிர்மனுதாரர்கள்/18, 19 பிரதிவாதிகள் தாவா சொத்தின்மீது வழக்கு தாக்கல் செய்த பிறகு குத்தகை உரிமை ஏற்பட்டுள்ளதாக கூறி பிரச்சனை செய்து வருவதால் சேர்க்கப்பட வேண்டிய எதிர்மனுதாரர்/18, 19 பிரதிவாதிகளையும் உள்ளடக்கி தீர்ப்பு பெற வேண்டியது அவசியமாக உள்ளது.

(v). மேற்படி மனுவினை அனுமதிப்பதால் யாருக்கும் எவ்வித கஷ்ட நஷ்டம் ஏற்படப்போவதில்லை. மாறாக, இந்த மனு அனுமதிக்கப்படாவிடில் மனுதாரர்/ 1–ஆம் வாதிக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, மனுவில் கண்டுள்ள நபர்களை மேற்படி மெயின் வழக்கில் 18, 19 பிரதிவாதிகளாக சேர்த்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

3. <u>3–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் :–</u>

தாவா சொத்தானது தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள கோவிலுக்கு சொந்தமானது. எனவே, மதுரை, இணை ஆணையாளரின் அனுமதியின் பேரில் தாவா சொத்துக்களானது பொது ஏலத்திற்கு விடப்பட்டது. முறையாக நடந்த ஏலத்தில் விருதுநகர், ஆத்துபாலத்தை சேர்ந்த நாகராஜ் என்பவருக்கு ஏலத்தின் மூலம் தாவா சொத்தானது குத்தகைக்கு விடப்பட்டது. எனவே, குத்தகைதாரர் என்ற முறையில் அவருக்கு தாவா சொத்தின் மீது சட்டப்பூர்வ உரிமை உள்ளது. 19–ஆம் உத்தேச எதிர்மனுதாரர் ஆதவன் வடிவேல் என்பவருக்கும், தாவா சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. எனவே, மனுதாரர் தவறான

எண்ணத்துடன் அவரை தரப்பினராக சேர்க்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். 19–ஆம் உத்தேச மனுதாரருக்கு தாவா சொத்தின் மீது எவ்வித சம்மந்தமும் இல்லாததால் அவர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினரோ அல்லது தேவையான தரப்பினரோ அல்ல. எனவே, இம்மனுவானது அவருக்கு எதிராக தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**6.** தற்போது இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**7.** மனுதாரர்கள்/வாதிகளால் மேற்படி அசல் வழக்கானது தாவா ஏ ஷெடியூல் சொத்து மேற்படி 1–ஆம் மனுதாரருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக மேற்படி மனுதாரரின் அமைதியான அனுபவத்தை 3–ஆம் பிரதிவாதியோ அவர் தம் வகையாட்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், பி ஷெடியூல் சொத்து 2–ஆம் வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதன் பின் தொடர்ச்சியாக தாவா சொத்தில் 2–ஆம் வாதியின் அமைதியான அனுபவத்தை 3–ஆம் பிரதிவாதியோ, அவர் தம் வகையாட்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** இந்நிலையில் மேற்படி 18, 19 எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசம் செய்தும், ஆக்கிரமிப்பு போர்டுகளை

அமைத்தும் இடையூறு செய்து வருவதாகவும், தாவா சொத்தின் மீது வழக்கு தாக்கல் செய்த பிறகு குத்தகை உரிமை ஏற்பட்டுள்ளதாக கூறி பிரச்சனை செய்து வருவதாகவும், அவர்களை கட்டுப்படுத்தும் வகையில் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமென்று கூறி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.** மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி தாவா சொத்தானது 18–ஆம் எதிர்மனுதாரர்/18–ஆம் உத்தேச எதிர்மனுதாரருக்கு மேற்படி 3–ஆம் எதிர்மனுதாரரால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக மேற்படி மனுதாரர்களுக்கும், 3–ஆம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட தாவா சொத்தின் மீதான உரிமை குறித்து இவ்வழக்கு எழுந்துள்ளதன் பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10.** இவ்வழக்கில் மேற்படி மனுதாரர்கள் தரப்பில் 18, 19 எதிர்மனுதாரர்கள்/ உத்தேச பிரதிவாதிகள் தாவா சொத்தை குத்தகை ஏலத்திற்கு எடுத்தது போல் ஆவணங்கள் தயார் செய்து பிரச்சனைகள் செய்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது.

**11.** மேற்படி 3–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையில் மேற்படி தாவா சொத்தானது முதலில் இணை ஆணையாளர், இந்து சமய அறநிலையத் துறை அவர்களின் அனுமதியின் பேரில் மேற்படி 18–ஆம் எதிர்மனுதாரருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி 18–ஆம் எதிர்மனுதாரரானவர் மேற்படி 3–ஆம் பிரதிவாதியின் மூலமாக தாவா சொத்தின் குத்தகையை பெற்றுள்ளார். அவ்வாறு இருக்கும்போது, மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பானது மேற்படி 18, 19 எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக இல்லா

விட்டாலும் 3–ஆம் பிரதிவாதியின் மூலமாக அவர்களையும் கட்டுப்படுத்தும். எனவே, அவர்கள் இவ்வழக்கின் அவசிய தரப்பினரோ அல்லது தேவையான தரப்பினரோ அல்ல.

**12.** மேலும், மேற்படி 19–ஆம் எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு எந்த வகையில் சம்பந்தப்பட்டவர் என்பது மனுதாரர்கள் தரப்பில் விளக்கப்படவில்லை. எனவே, மேம்போக்காக மேற்படி 18, 19 எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களின் உரிமையை பாதிக்கும்படி நடந்து கொள்வதாக கூறுவதால் மட்டுமே அவர்களை அவசிய தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து தள்ளுபடி செய்து உத்தரவிடலாம் என்றே தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R V RAJA KUMAR Digitally signed by R V RAJA KUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

இல்லை.

R V RAJA KUMAR Digitally signed by R V RAJA KUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.3/2023 இன்
மு.வ.எண்.41/2016
உத்தரவு நாள். 14.03.2025